**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**முன்னிலை:- திருமதி.R.தமிழரசி, B.A., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ஆம் நாள் திங்கள் கிழமை**

**அசல் வழக்கு எண். 79/2022**

மா.சண்முகம் .....**வாதி**

//**எதிர்**//

1) எசக்கியம்மாள்

2) கிருஷ்ணமூர்த்தி

3) வெள்ளையம்மாள்

4) தனலட்சுமி

5) பழனியப்பன்

6) சத்திய பிரியா

7) சகிகலா

8) சுபாஷினி

9) உயர்திரு.சார்பதிவாளர் அவர்கள்,

சார்பதிவாளர் அலுவலகம், தரகம்பட்டி, கரூர்

10) உயர்திரு.வட்டாட்சியர் அவர்கள்,

வட்டாட்சியர் அலுவலகம், கடவூர், கரூர்

11) உயர்திரு.மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் ...... **பிரதிவாதிகள்**

இவ்வழக்கு என் முன்பாக 16.12.2024 ஆம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தங்கம், அவர்கள் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், 9 முதல்11 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகிவும், 1,2,4 முதல் 8 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்த போது வருகையில்லாததால் தோன்றாதரப்பினர்களாக கொண்டும், வாதியை நீதிமன்றத்தில் அழைத்த போது வருகையில்லாததால், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

இறந்துபோன மாணிக்க ஆசாரி நேரடி வாரிசுதாரர் என்ற முறையில் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து பொறுத்து 1 மற்றும் 9ம் பிரதிவாதிகள் தரகம்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்திய கிரைய ஆவண எண்.229/1992 நாள் 24.03.1992 செல்லத்தக்கதல்ல என 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்ய கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**முடிவாக**

3ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். வாதியை இன்று நீதிமன்றத்தில்

அழைத்தபோது வருகையில்லை. ஏற்கனவே வாதிக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு இன்று விசாரணைக்காக பட்டியலில் போடப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்து தீப்பளிக்கப்படுகிறது.

2024 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16 ம் நாளன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

Sd/-R.தமிழரசி

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**குளித்தலை.**